## மொறட்டுவை பல்கலைக்கழகம் - 2013

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிகள் கற்கைகள் பயிற்சி நிறுவக அதிகாரசட்டத்தின் 13(3) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில்

உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று, இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தேறிய பெறுமதி பூச்சியமாகிய தற்போது பாவனையில் உள்ள ரூபா 1,749,081,481 கிரயமுடைய சொத்துக்கள் மீண்டும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,533,347 இற்குரிய மீண்டுவரும் செலவினம் செலவினக் கணக்குகளுக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக அருவச் சொத்துக்களாகவும், ரூபா 598,080 ஆன மூலதனச் செலவினம் மீண்டுவரும் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படு நிலைமையில் இல்லாத 10 குறுகியகால கற்கை நெறிகளின் இறுதி மீதியான ரூபா 2,387,776 தொகை பல்கலைக்கழகத்தின் வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பிற்போட்ட வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,587,123 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டமையால் செலவிடப்பட்ட மூலதன மானியக் கணக்கு அப்பெறுமானத்தால் குறைவாக காண்பிக்கப்பட்டதுடன், ஆண்டின் பெறுமானத் தேய்வு அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அட்டுறு பாதுகாப்புச் செலவினமாக ரூபா 1,672,075 கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்தமையால் அட்டுறு செலவினம் மற்றும் பாதுகாப்பு சேவைகள் செலவினம் அப்பெறுமானத்தால் கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 1,400,000 செலுத்தி குத்தகை அடிப்படையில் கையேற்கப்பட்டிருந்த காணி குத்தகை ஆதனங்களாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 791,367 ஆன மீண்டுவரும் செலவினத்திற்குரிய செலவினம் கணக்குகளில் வரவு வைப்பதற்குப் பதிலாக உபவேந்தர் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) உடன்படிக்கைகளையும் பிணைமுறிகளையும் மீறுதல்**

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கைகளையும் பிணைமுறிகளையும் மீறிய 32 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 52,909,188 தொகையான உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகள் இழப்பீட்டுத் தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கைகளை மீறிய 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,505,921 தொகையில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கு குறித்த உத்தியோகத்தர்கள் அங்கீகாரம் வழங்கியிருந்த போதும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கைகளையும் பிணைமுறிகளையும் மீறியமைக்காக ரூபா 14,766,369 அறவிடப்பட வேண்டிய 5 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அதில் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,905,870 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது.

(ஆ) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் உள்ளக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கான இணக்கப்பாட்டின் அடிப்படையில் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 4,435,700 செலவில் விளையாட்டரங்கு

நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்த போதும் செலவிடப்பட்ட தொகை இதுவரை மீள்நிரப்பப்படாதிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கிடைக்க வேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,793,700 தொகையான பெறவேண்டிய மஹபொல மற்றும் மாணவர் உதவிப்பணம் என்பவற்றின் காலப்பகுப்பாய்வு மற்றும் மாணவர்களின் பெயர் பட்டியல் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமை |
|---|---|
| (அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99 ஆம் பிரிவு | உயர்கல்வி நிறுவனத்தால் எத்தோற்றுவாய் மூலமேனும் பெறப்படும் அல்லது கையேற்கப்படும் சகல தொகையும் பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், பட்டமளிப்பு வைபவத்திற்காக மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டணம் ரூபா 4,002,694 தொகையும் தகைமை பரிசோதனை வருமானம் ரூபா 2,783,824 தொகையும் பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்படாது செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | சகல உயர் கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் சகலரும் வருகை நேரத்தையும் வெளியேறும் நேரத்தையும் வருகைப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டுமாயினும், கல்விசார் பதவியணியினர் தாம் வருகை நேரத்தையும் வெளியேறும் நேரத்தையும் கையெழுத்திட்டுக் குறிப்பிட்டிருக்கவில்லை. |

**2.2.6 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 99 ஆம் பிரிவின் பிரகாரம் உயர்கல்வி நிறுவனத்தால் எத்தோற்றுவாய் மூலத்திலிருந்து அல்லது கிடைக்கப்பெறும் சகல வருமானங்களும் பல்கலைக்கழக நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவரின் யூஜிசீ/எப்/பீஏ/2002 மற்றும் 2003 பெப்ரவரி 24 ஆம் திகதி கடிதத்தின் மூலமும் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தால் உழைத்த வெளிவாரி பாடநெறி வருமானத்தில் ரூபா 7,170,033 தொகையும் தகைமை பரிசோதனை வருமானத்திலிருந்து ரூபா 1,880,579 தொகையையும் திறைசேரி அங்கீகாரமின்றி ஊழியருக்கு இடையே பகிரப்பட்டிருந்தது. இவ்வாறு கொடுப்பனவு செய்வதற்காக உசாத்துணைச் சேவை பொறுப்பேற்றலுக்கான 380 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை தவறாக அர்த்தப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் நோக்கம் உயர் கல்வி நிறுவனங்களை நிறுவுதலும் அவற்றைப் பராமரித்தலுமே ஆகும். எனினும், அந்த அதிகாரச் சட்டத்திற்கு முரணாகவும் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றியும் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள தனியார் கம்பனி ஒன்றிற்கு தகவல் தொழில்நுட்ப வெளிவாரி கற்கை நெறி (BIT) வருமானத்தில் ரூபா 2,613,580 தொகை முகாமைத்துவக் கட்டணமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் பற்றாக்குறை ரூபா 190,252,999 ஆக இருந்ததுடன்,

அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 64,407,671 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானியங்கள் ரூபா 103,772,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 125,845,328 ஆல் அதிகரித்திருந்ததுடன், பதவியணியினருக்கான சம்பளம் ரூபா 158,364,163 ஆல் அதிகரித்தமை, நலன்புரிச் செலவினம் ரூபா 24,713,733 ஆல் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவைகள் செலவினம் ரூபா 26,360,158 ஆலும் அதிகரித்தமை இதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் மாணவர்கள் தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பொறியியல் பீடம் | தகவல் தொழில்நுட்ப பீடம் | கட்டிடக் கலை பீடம் |
|---|---|---|---|
| நிரந்தர விரிவுரையாளர் எண்ணிக்கை | 253 | 28 | 83 |
| சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 1005 | 274 | 468 |
| வெளியேறிய பட்டதாரிகள் எண்ணிக்கை | 697 | 67 | 309 |
| நிலைத்திருந்த மாணவர் எண்ணிக்கை | 3498 | 720 | 1299 |

(அ) மீளாய்வாண்டில் சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 364 ஆக இருந்ததுடன், ஒரு விரிவுரையாளருக்கான சராசரி மாணவர்களின் எண்ணிக்கை 15 ஆக இருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மீண்டுவருஞ் செலவினம் ரூபா 1,444,551,340 ஆக இருந்தமையால் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 261,836 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 825 பட்டதாரி அபேட்சகர்களுக்கும் 230 பெண் பட்டதாரி மாணவர்களுக்கும் விடுதி வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், விடுதிச் செலவினம் ரூபா 5,661,639 ஆக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம்

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1995 ஜூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பரீட்சை நடாத்தப்பட்டு 3 மாதங்களுக்குள் பெறுபேறுகளை வெளியிடப்பட வேண்டிய போதும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சைகளது பெறுபேறுகளை வெளியிடுவதில் 04 முதல் 17 மாத கால தாமதம் நிலவிய 73 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) சில பட்டப் படிப்புக் கற்கை நெறிகளது முதல் தவணைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட காலம் அக்கற்கை நெறிகளுடன் தொடர்புடைய மாணவர்களது இரண்டாவது தவணைப் பரீட்சை முடிவுற்ற திகதியின் பின்னர் வரை தாமதமாகிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) பல்கலைக்கழகம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் கையேற்கப்பட்டிருந்த காணிக்குரிய குத்தகை உடன்படிக்கையின் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட திகதியின் அதாவது 2009 ஒக்தோபர் 14 ஆம் திகதி முதல் 02 ஆண்டுகளுக்குள் அபிவிருத்தி நடவடிக்கைகள் செய்து முடிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்வதற்குள்ள காலஎல்லை 2011 ஒக்தோபர் 14 ஆம் திகதி வரையில் காலாவதியாகியிருந்ததுடன், அந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் 2014 யூன் 11 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 புலப்படக்கூடிய மோசடிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் அங்கீகாரமொன்று இல்லாமல் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர்

வேறு அரச நிறுவகமொன்றில் விசேட மதியுரையாளர் பதவியில் கடமை புரிந்து 2011 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2014 மார்ச் மாதம் வரை கடமை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அக்காலப்பகுதியில் அவர் அச்செயற்பாட்டை மேற்கொள்வதற்காக ரூபா 2,770,350 ஆன படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் அவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சேவை புரிந்தமைக்காக ரூபா 3,952,323 ஊதியம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.4 நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக கிடைத்த மானியங்கள் மூலம் உருவாக்கப்பட்ட ரூபா 4,174,191 தொகையான 25 நிதியங்களில் இருந்து கடந்த 5 ஆண்டுகளில் புலமைப்பரிசில் எதனையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததுடன், ரூபா 7,566,781 தொகையான 37 புலமைப் பரிசு நிதியங்கள் ஆண்டில் செயற்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மானியங்களாக கிடைத்த ரூபா 4,887,358 தொகையான 05 நிதியங்களும் ரூபா 3,812,060 தொகையான 17 திணைக்கள நிதியங்களும் ரூபா 4,556,334 தொகையான 12 பாடநெறி அபிவிருத்தி நிதியங்களும் மீளாய்வாண்டில் செயலற்றுக் காணப்பட்டன.

## 4.5 முறையாகச் சுவீகரிக்கப்படாத காணி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொறட்டுவை பல்கலைக்கழகம் அமைந்துள்ள 55 ஏக்கர் அளவிலான காணி மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பெயருக்கு இதுவரையில் பொறுப்பேற்கப்படாதிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குரிய 05 ஆதனங்கள் தொடர்பாக வீதவரிக் கொடுப்பனவு முன்னைய உரித்தாளரின் பெயரிலேயே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உரிமை மாற்றம் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு, இச் சொத்துக்களைப் பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பேற்று வீதவரிக் கொடுப்பனவையும் பல்கலைக்கழகத்தின் பெயரிலேயே கொடுப்பனவு

செய்யப்பட்ட வேண்டிய போதிலும், பல ஆண்டுகளாக அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியில் 82 வெற்றிடங்களும் ஏனைய பதவியணியில் 71 வெற்றிடங்களும் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, மீளாய்வாண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்த 04 பட்டபின்படிப்பு கற்கை நெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாடும்
(ஆ) பட்டபின்படிப்பு கற்கை நெறி வருமானம்
(இ) கணக்கீடு
(ஈ) உடன்படிக்கை மீறல்
(உ) கல்விசார் பதவியணியினரின் வருகையும் வெளியேறலும்